# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

" உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். "

உபாகமம் 28:1

செய்தி மலர்
2023
செப்டம்பர்

இதழ் : 05
மலர் : 20



# சபை ஊழியரின் அன்பு மடல்



## தேவனின் சத்தத்திற்க்கு செவி கொடு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த ஆகஸ்டு மாதம் முழுவதும் நம்மை கரம் பிடித்து நடத்தின கர்த்தர் வரும் செப்டெம்பர் மாதத்திலும் அதிசயமாய் வழி நடத்துவாராக.

கர்த்தர் சொன்னார் "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாய் இருக்கும்படிக்கு அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபாக–28:1)

ஆம் பிரியமானவர்களே, இன்றைக்கும் கர்த்தர் வேத வசனங்கள் மூலமாய் நம்மோடு பேசுகிறார். அவர் என்ன பேசுகிறார் என்று கவனமாய் கேட்டு அவர் கட்டளைகளின்படி நாம் நடக்கும்போது கீழ்வரும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுகிறோம்.

### 1. நீ சகல காரியங்களிலும் ஆசீர்வதிக்கப்படுவாய்

"நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் உன் கர்ப்பத்தின் கனியும் உன் நிலத்தின் கனியும் உன் மாடுகளின் பெருக்கமும் உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் உன் கூடையும் மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்படிட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்" (உபாக–28:3–6)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தருக்கு பயந்து அவர் கட்டளைகளை கைபிடிக்கின்றபொழுது நம் வீட்டிலுள்ள மிருக ஜீவன்களும் வயல்களின் பலனும் உண்ண உணவும் உடுக்க உடையும் அபரிதமாக ஆசீர்வதிக்கப்படும் என்று சத்திய வேதம் கூறுகிறது. ஆண்டவரின் சத்தத்துக்கு கவனமாய் கீழ்ப்படிவோமாக!

## 2.சத்துருக்களை மேற்கொள்வாய்

"உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களை கர்த்தர் உனக்கு முன்பாக முறியடிக்கும்படி ஒப்புக்கொடுப்பார். ஒருவழியாய் உனக்கு எதிராக புறப்பட்டு வருவார்கள். ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்"(உபாக–28:7)

ஆம் பிரியமானவர்களே, பொறாமை நிறைந்த மனிதர்கள் மத்தியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவையும் பொறாமையினால்தான் அன்னாவும், காய்பாவும் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். பிசாசானானவன் இப்படிப் பொறாமை நிறைந்த மனிதருக்குள்ளாளக புகுந்து கொண்டு நமக்கு விரோதமாக எழும்பி வருவார்கள். ஆனால் கர்த்தர் நம்மோடு இருப்பார் என்று சொன்னால் எல்லா சத்துருக்களையும் பிசாசின் வஞ்சகங்களையும் இயேசுவின் நாமாத்தினாலே முறியடிப்போம். ஏழு திசையாய் சத்துருக்கள் சிதறிப்போய்விடுவார்கள்.

வேதம் கூறுகிறது உமக்கு விரோதமாய் "உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம். உனக்கு விரோதமாய் நியாத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய் இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னால் உண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா–54:17)

## 3.உன்னை பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே உன்னை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்கு தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்கள் எல்லாம் கண்டு உனக்கு பயப்படுவார்கள்" (உபாக–28:9,10)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் நம்மை பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1-பேது-2:9) அதனால்தான் தாவீது சொல்கிறான் " நீதிமான் பனையைப் போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். (சங்கீ-92:12,13)

" என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங்கீ-23:6)

நாம் நீடிய ஆயுளோடும் சுகத்தோடும் பலத்தோடும் வாழ கர்த்தர் கிருபை பாராட்டுவார். இந்த உலகத்தில் வாழ்கின்ற நாட்கள் முழுவதும் கர்த்தருடைய வீட்டின் நன்மைகளினாலும் ஆசீர்வாதங்களினாலும் கர்த்தர் நம்மை நிரப்புவார்.

## 4.ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழைப் பெய்யும்

" ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழைப் பெய்யவும் நீ கையிட்டு செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்கு தமது நல்லப் பொக்கிஷ சாலையாகிய வானத்தை திறப்பார். நீ அநேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய். கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய்" (உபா-28:12-14)

ஆம் பிரியமானவர்களே, நம் வாழ்க்கையில் ஆசீர்வாதமான மழை எப்போதும் பெய்யும். அநேகருக்கு உதவி செய்பவர்களாக கர்த்தர் நம்மை வாழ வைத்து நம் தலையை உயர்த்துவார். நாம் செய்கிற காரியமெல்லாம் வாய்க்கும்படி செய்வார். " கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியாமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராத

மரத்தைப் போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்கீ-1:2,3)

ஆகவே எனக்கன்பானவர்களே, இந்த உலகத்திலே நாம் செய்ய நினைக்கிற காரியங்கள் எல்லாம் வாய்க்க செய்யவும் நம்முடைய முயற்சிகள் எல்லாம் வெற்றியடையவும் நம்முடைய ஜெபங்கள் எல்லாம் கேட்கப்படவும் கர்த்தர் பிரியமுள்ளவராயிருக்கிறார். நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். கர்த்தரின் சத்தத்தை கவனித்துக் கேட்டு அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொண்டு நடக்கும் பொழுது மேற்சொன்ன அனைத்து ஆசீர்வாதங்களும் நமக்க கிடைக்கும்.

"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்கும்படி வேண்டுகிறேன்" என்று பரிசுத்த யோவான் கூறுகிறார். (3-யோவா:2)

கர்த்தர் தாமே வருகிற செப்டெம்பர் மாதம் முழுவதும் நம்மை ஆசீர்வதித்து கரம்பிடித்து நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

### பிரயாசத்திற்கு பலன் உண்டு

சங்கீ-128:2 " உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்"

நான் படுகின்ற இந்த பிரயாசத்திற்கு பதில் உண்டா? இவ்வளவு நாளாய் ஓடுகிறேனே, கைப்பாடாய் சேர்க்கின்றேன் ஒரு பலனும் காணவில்லையே என்று சொல்வோமானால் வேதம் சொல்கின்றது, உங்கள் பிரயாசத்திற்கு நிச்சயமாய் பலன் உண்டு. உறுதியாக பதில் உண்டு நீங்கள் தான் புசிப்பீர்கள், நீங்கள் தான் சாப்பிடுவீர்கள், காண்பீர்கள்(அந்நிய கண்கள் அல்ல உங்கள் கண்களே காணும்)

பிரசங்கி-3:13 அன்றியும் மனுஷர் யாவரும் புசித்து குடித்து தங்கள் சகல பிரயாசத்தின் பலனை அனுபவிப்பது தேவனுடைய அனுக்கிரகம்.

உங்கள் பிரயாசம் கர்த்தருக்குள் எதுவாயிருந்தாலும், நீங்கள் படுகிற பிரயாசம் எதுவாயிருந்தாலும், நீதி-14:23 சொல்கிற படி சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனம் உண்டு.

நீண்ட நாட்களாக பிரயாசத்திற்கு எதிர்பார்த்து காத்திருந்து, ஒரு விதமான சோர்வோடு நீங்கள் இருக்கலாம். வெளியே சொல்ல முடியாமல் அந்தரங்க வாழ்க்கையிலே ஒரு விடுதலை வேண்டுமே, ஒரு அற்புதம் வேண்டுமே என்று நீங்கள் பிரயாசப்படுவீர்களானால், பிரச-5:19 -படி தன் பிரயாசத்தில் மகிழ்ச்சியாய் இருக்கவும், அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அனுக்கிரகம். அதுமாத்திரமல்ல நீதி-10:16-ன் படி நீதிமானுடைய பிரயாசம் ஜீவனைப் பிறப்பிக்கும். ஆமென்

நாம் பட்ட பிரயாசத்தை நாம் மறந்தாலும் தேவன் ஒருபோதும் மறக்கிறவரல்ல. நம்முடைய அன்பின் பிரயாசத்தை மறந்து விடுகிறதற்கு அவர் அநீதியுள்ள தேவன் அல்ல. வேதம் சொல்கிறது அவர் நீதியுள்ள தேவன். ஒரு வேளை நீங்கள் செய்த நன்மையை பெற்றவர்கள் அதை மறந்திருக்கலாம். உலகம் சீக்கிரமாய் எல்லாவற்றையும் மறந்து விடும். ஆனால் ஆண்டவரோ ஒருநாளும் மறக்கிறவரல்ல. எபி-13:8. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

2-நாளா-15:7 நீங்களோ உங்கள் கைகளை நெகிழ விடாமல் திடன் கொள்ளுங்கள். உங்கள் கிரியைகளுக்கு பலனுண்டு ஒரு நாளும் சோர்ந்து போகாமல் விசுவாசத்தோடே நாம் காத்திருக்கும் போது நாம் படுகிற எல்லாப் பிரயாசத்திற்கும் பலனுன்டு, கிரியைகளுக்கு பலனுண்டு, செய்கைக்கு தக்க பலனுண்டு.

அப்படி பிரயாசத்தின் பலனை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட மூன்று பேரைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

லூக்-5:6 வலை கிழிந்து போகத்தக்கதான மிகுதியான மீன்களை பிடித்தார்கள். லூக்-5:2 ஒரு கூட்டத்தினர் ஏமாற்றத்தோடு வலைகளை அலசிக்கொண்டிருக்கிறார்கள். பேதுரு இயேசுவைப் பார்த்து சொல்லுகிறார் லூக்-5:5 இராமுழுவதும் பிராயசப்பட்டோம் ஒன்றும் அகப்படவில்லையே? ஆனாலும் உம்முடைய வார்த்தையின் படி வலையைப் போடுகிறேன் என்றான். நீங்கள் இத்தனை ஆண்டுகள் பிரயாசப்பட்டோம் முயற்சி செய்தோம் பலன் கிடைக்காமல் போயிருக்கலாம். ஆனால் பேதுரு இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான் இரண்டு படகுகளும் அமிழத்தக்கதாய் நிரப்பட்டது என்று பார்க்கிறோம். (லூக்-5:4-7)

இரண்டாவதாக, ஆதி–26:12,22 ஈசாக்கு அந்த தேசத்திலே விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். இந்த ஆசீர்வாதம் சாதாரண சூழ்நிலையில் அல்ல ஒரு நெருக்கமான சூழ்நிலை. கர்த்தர் எப்படி ஆசீர்வதித்தார் 100 மடங்கு ஆசீர்வதித்தார். ஆதி–26:1 நாம் பார்க்கும் போது அந்த தேசத்திலே மிகப்பெரிய பஞ்சம் உண்டாயிருந்த சமயத்தில் தான் கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தார். அது போல நம்முடைய வாழ்க்கையிலே எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை மறக்காமல் வாக்கு பண்ணினவர் நிச்சயமாய் நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தோடு நாம் கிரியை செய்யும்போது கர்த்தர் நம் பட்சத்திலிருந்து நம் பிரயாசத்திற்கு பலனைத் தருவார்.

மூன்றாவதாக, ரூத்–2:12 உன் செய்கைக்கு தக்க பலனை கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக. என்று போவாஸ் ரூத்திடம் சொல்வதைப் பார்க்கலாம். 2:16 அவள் சாப்பிட்டு திருப்தியடைந்து மீதமெடுக்க கர்த்தர் கிருபை தந்ததை நாம் பார்க்கிறோம். இது கர்த்தர் ரூத்திற்கு கொடுத்த பிரயாசம். "கர்த்தர் உன் கையின் பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் விட்டுவிடுவாயாக"(உபா–24:19) சொல்கிற படி நாம் தான தர்மங்கள் செய்ய நாம் பிரயாசப்பட வேண்டும் என்று கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்" (நீதி–17:19) அது மாத்திரமல்ல "சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்" என்று வேதம் சொல்கிறது.(சங்கீ–41:1)
அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலி–2:12), மத்–24:11 –ல் சொல்கிறது போல "முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" ஆகையால் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்களுடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்.

1–கொரி–15:58 கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

எபி–6:10 அவருடைய நாமத்தின் மகிமைக்காக ஆத்துமா ஆதாயத்தின் நிமித்தம், ஊழியத்தின் நிமித்தம் நாம் கிறிஸ்துவுக்காக படுகிற அன்பின் பிரயாசத்தை ஒரு போதும் மறந்து விடுகிற தேவனல்ல நம்முடைய தேவன். ஆகையால் கர்த்தருடைய வார்த்தையின் படி கீழ்ப்படிந்து அவருஜடய சித்தத்தை செய்ய நாம் பிரயாசப்படும் போது நிச்சயமாய் கர்த்தர் நம்முடைய பிரயாசத்தை ஆசீர்வதிப்பார்.
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தரின் பணியில்,
சகோ.பிராங்கிளின் கலைச்செல்வன்.

## வாலிபர் பகுதி

ஆதி–2:18–ல் கர்த்தர் மனிதனை தாம் படைத்த அந்த அழகான ஏதேன் தோட்டத்தை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் மற்றும் அவரின் கரத்தின் கிரியையாகிய பூமியை ஆண்டுகொள்ளும்படி படைத்தார். மிகவும் முக்கியமாக தன் வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்கவும் அவர் சமூகத்தில் மகிழவும் படைத்தார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு "கீழ்படிதல்" மிகவும் அவசியம்.

1–சாமுவேல்–15–ல் கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்பபடிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என்று வாசிக்கிறோம். நாம் கர்த்தருக்காக எதை செய்தாலும் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படியவில்லையென்றால் நாம் செய்யும் எந்த காரியமும் கர்த்தர் பார்வையில் வீணானவைகளே. கீழ்படிதல் என்றால் என்ன? நாம் ஒன்றை செய்ய வேண்டும் என்று கர்த்தரால் நமக்கு வகுத்து கூறப்படும் வழிகளில் நாம் தவறாது நம் செயல்பாடுகளை நேர் படுத்தி கொள்வது. 2–ராஜா– 22–ம் அதிகாரத்தில் யோசியா ராஜா நியாயப்பிரமாணம் புத்தகத்தை வாசிக்க கேட்டதும் அவன் தன் வஸ்திரத்தை கிழித்து அழுதார் என்னென்றால் அவரின் பெற்றோர் மூலமாய் அந்த புத்தகத்தை குறித்து அவர் அறியாதிருந்தார். அவருக்கு முந்தின

ஜனங்கள் தங்கள் தேவனுக்கு பிரியமில்லாமல் செய்த காரியங்களை தேவன் அவர்களுக்கு மன்னியாத காரணத்தால் ஜனங்களுக்கு உண்டாகும் அழிவை யோசியா ராஜா காணாதபடி கர்த்தர் அவரை அவர் பிதாகளண்டையில் சேர்த்து கொண்டார் என்று வாசிக்கிறோம்.

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருப்பது அவசியமானது. கீழ்ப்படியாமையினாலே நம் ஆதி பெற்றோர் காத்தரிடத்தில் தங்களுக்கு இருந்த மேன்மையை இழந்தனர். நாம் கீழ்ப்படியும்படி எடுக்கும் முயற்சிகளில் அணை போடும் படியாக சத்துரு அநேக உபாய தந்திரங்களை உபயோகிக்க முற்படுவான். ஆகவே நாம் அவன் தந்திரங்களை கர்த்தருடைய வார்த்தைகளினால் ஜெயிக்க பெலன் பெற்றுக்கொள்ள கர்த்தரிடத்தில் காத்திருந்து கிருபைகளை பெற்றுக்கொள்வோமாக.

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியும்போது நம் காரியங்களில் நாம் ஜெயம் பெற கர்த்தர் கிருபை செய்வார். பிசாசு நம்மைக் கண்டு கலங்குவான். ஏனென்றால் நாம் கர்த்தரின் சத்தத்துக்கு கீழ்படிகிறோம் அல்லவா. கர்த்தருடைய சத்தம் வல்லமை உள்ளது. ஆனால் அந்த சத்தம் நமக்கோ தென்றல் போன்றது. நம் சத்துருவுக்கோ பயத்தை வெளியாக்குகிற வல்லமையுள்ளதாய் இருக்கிறது. தேவனுக்கு கீழ்படிவதால் பிசாசு நம் சபையில் வர நாம் அவனுக்கு இடம் கொடாதிருக்கிறோம். விசுவாச வாழ்வின் அடிப்படையே கீழ்படிதல்தான்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கீழ்படியாமையினால் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை காணாமல் தங்கள் பிள்ளைகள் அதை பார்க்கும்படி அவர்களை தேவன் வனாந்திரத்திலே அழிக்க சித்தம் கொண்டார். நாம் நம் பரம கானானை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக நாம் கீழ்ப்படிதலோடு கூடவே தேவன் மேல் கொண்ட விசுவாசத்தில் உறுதிப்படுவோம். நாம் வழியில் அழிந்து போகாத வண்ணம் அவரை முத்தம் செய்வோம். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

வாலிபம் இயேசுவுக்கே.

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்@

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஆன்டனி கமலதாசன்
செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வி. மோனிகா செர்லின் பால்ராஜ்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வன். சிராஜ் ஜேடன் சாலோமோன்
சகோதரி. ஜரின் நிஷா கிரன் குமார்
செல்வி. எஸ்தர் லிடியா பால் பெஸ்டஸ்
செல்வன். அமீஷ் டேவிட் ஜெயக்குமார்
சகோதரி. இவாஞ்சிலின் கிறுஸ்டி சகாய டார்வின்
செல்வன். ஞான சிகாமணி ஆசீர்வாதம்
சகோ. ஷர்மன் ராஜ்
செல்வி. டெல்ஷியா காட்லின் ஸ்டீபன் ஜெயகுமார்
சகோ. ஜெகநாதன்
சகோதரி. செலின் ஷோபியா மேரி டேவிட் ஜெயக்குமார்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
சகோதரி. சுபா ஸ்டீபன்
செல்வன். சந்தோஷ் ரவிஜான் பீட்டர்
செல்வன். மிர்துன் ராஜ் சதிஷ்குமார் எத்திராஜ்

சகோ.மணிராஜ்
செல்வி.அறிவழகி களியமூர்த்தி
சகோதரி.அமுதா சுகமாரன்
செல்வி.பெர்டினா சுனில்
செல்வன். பிரயான் சதிஷ்குமார்
செல்வி.தீபா ராஜன்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்
சகோதரி. தெபோரா ஆனி மெர்ஸி சைமன்ஜெயக்குமார்
செல்வன். டோவின் ஜோசப் திவ்யராஜ்
சகோதரி. அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி. ரீனா வேளாங்கண்ணி
சகோதரி. பிரதீபா செரினா வினோத்
செல்வன். ஆரோன்டேனியேல் மணிராஜ்
செல்வி. பிலெஸ்ஸி பியூலா வில்சன்
சகோ. தினேஷ் குமார்
செல்வி.ஜெரில் ஜெனிகா ஜெய் சாம் டேனியேல்
சகோதரி. ரின்சி வேளாங்கண்ணி
செல்வன். கெவின் ஆஷ்ரே ஆரோக்கியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி /திரு. ஜோசப் பாபுராஜ்
திருமதி /திரு. வில்சன் செல்லையன்
திருமதி / திரு. ரவிஜான் பீட்டர்
திருமதி /திரு. மார்க் ஆன்டனி
திருமதி / திரு. பிராங்கிளின்

# 2023 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/09/2023 | சகோ.ஜான் போஸ்கோ | சகோ.ஸ்டாலின் |
| 10/09/2023 | சகோ.பிரசாத் | சகோ.அசோக் குமார் |
| 17/09/2023 | சகோ.வில்சன் | சகோ.சுகுமார் |
| 24/09/2023 | சகோ.சுபின் சிங் | சகோ.தாமஸ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/09/2023 | சகோ.பிராங்கிளின் | சகோ.ஸ்டாலின் |
| 08/09/2023 | சகோ.சுகுமார் | சகோ. ஆன்டனி |
| 15/09/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை<br>பாஸ்டர்.டேனியல் மோசஸ் (City & Praise- Madurai) | |
| 22/09/2023 | வாலிபர் ஐக்கிய ஆராதனை | |
| 29/09/2023 | சகோ. ஏசுரெத்தினம் | சகோ.ஜெகநாதன் |

**14/09/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**23/09/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – எபிரேயர்

**29/09/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**


இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – I இராஜாக்கள்

# 2023 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



**1.நமக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தை பெற நாம் என்ன செய்ய வேண்டும்?**

**2.எது நியாயம்?**

**3.பணிவிடை ஆவிகள் யார்?**

**4.கிறிஸ்து பவுலுக்கு வெளிப்படுத்தின இரகசியம் என்ன?**

**5. நாம் இரட்ச்சிக்க படுகிறோம் என்றால் நாம் யார்?**

**6.அடைக்களமாய் ஓடி வந்த நமக்கு தேவன் என்ன செய்தார்?**

**7.கிறிஸ்துவுக்குள் எப்படி முத்திரை போடப்பட்டோம்?**

**8.பாடுபடுவதினாலே எதை கற்றுக் கொள்கிறோம்?**

**9.விசுவாசத்தோடு யார், யார் மரித்தார்கள்?**

**10.புது உடன்படிக்கையை நிறைவேற்றினவர் யார்?**

**11.இயேசு ஏறின கழுதை குட்டியின் சொந்த ஊர் எது?**

**12.துவக்கமும், முடிவும் இல்லாதவன் யார்?**

**13.தேவன் பிரியமாயிருக்கும் பலிகள் யாவை?**

**14.யாருக்கு யார் தலை?**

**15.எது சால்வையை போல சுருட்டப்படும்?**

**விடைகளை வருகின்ற** 20-09-2023**க்குள்**
(WhatsApp #+91 8940523562) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் எபேசியர் 1-6 மற்றும் எபிரேயர் 1-13 ஆகிய அதிகாரத்தில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7**

## 2023 – ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு விடை

1.பேதுரு, அந்திரேயா (மத் 4:18,19)

2.ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கு. (மத் 10:28)

3.தேவாலயம் (ஜெபவீடு) (மத் 21:13)

4.பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் (மத் 12:32)

5.கள்ளத் தீர்க்க தரிசிகள் (மத் 7:15)

6.வாய்குள்ளே போகிறது மனுஷனை தீட்டு படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனை தீட்டு படுத்தும். (மத் 15:11,12)

7.இயேசுவை அடக்கம் பன்னுவதற்கு (மத் 26:12)

8.கலிலேயா (மத் 28:16,17)

9.தர்மம் செய்யும் போது (மத் 6:3)

10.இயேசு, பேதுரு (மத் 14:25,29)

11. கலிலேயா (மத் 21:11)

12. தலைவன் ஒருவன் (மத் 9:18,19)

13.மனுஷகுமாரன் வரும் காலத்திலும் (மத் 24:37)

14.இயேசுவின் வார்த்தைகள் (மத் 24:35)

15.யோவான் ஸ்நானன் (மத் 17:12,13)

## 2023– ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்

Sis.நித்யா ஜோன்ஸ்

Sis.அனிதா திவ்யராஜ்

Sis.ஜெஸ்லெட் வர்கீஸ்

Sis.சாந்தி

Sis.சுபா ஸ்டீபன்

Sis. பியூலா மெர்ஸி பால்

Bro.எபினேசர்

Bro.பக்த ராஜ்

# தேவனுடைய ஊழியக்காரிகள்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.
என்னுடைய ஊழியக்காரர் மற்றும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். (அப்-2:18)

கடைசி நாட்களில் தேவன் செய்ய திட்டம் பண்ணினதை யோவேல் தீர்க்கதரிசி கூறினார். அதனை பேதுரு மீண்டுமாக அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் குறிப்பிடுவதை பார்க்கின்றோம். இந்த வசனத்தில் குறிப்பாக "என்னுடைய ஊழியக்காரிகள் மேலும்" என்று பெண்களாகிய நம்மை பயன்படுத்த விரும்பி ஊழியக்காரிகள் என்ற வார்த்தையை குறிப்பிட்டிருப்பது எத்தனை பாக்கியம்.

ஆம், சகோதரியே ஊழியக்காரியாகிய உங்கள் மேல் தேவன் அவருடைய ஆவியை ஊற்றுவார், அவர் நாமத்தின் மகிமைக்காக ஊற்றுவார். அவர் ராஜ்ஜியத்தின் வேலைக்காக ஊற்றுவார். மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் என்று வசனம் கூறுகின்றது. அவருடைய ஊழியக்காரிகள் என பெண்களாகிய நம்மை தம் உரிமையாக தம் சொந்தமாக எத்தனை அழகாக தேவன் நம்மை அழைக்கிறார். அல்லேலூயா.

ஆம், நாம் அவருடைய ஊழியக்காரிகள், நாம் ஊழியம் செய்யும் எஜமான் சிறந்த எஜமான். அன்பான, தயவான, இரக்கமுள்ள, நீதியுள்ள எஜமான். ஆகிலும் மல்கியா 1:6-ல் பார்க்கிறோம். நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று தேவன் கேட்கிறார். என்னுடைய ஊழியக்காரி என உரிமையாக நம்மை அழைக்கும் தேவன் ஒரு எஜமானாக அவருக்கு பயப்படும் பயத்தையும் உரிமையாக எதிர்பார்க்கிறார்.

அவருக்கு பயப்படும் பயம் நம்மிலும் நம் குடும்பத்தினர் ஒவ்வொருவரோடும் எந்நேரமும் எல்லா சூழ்நிலையிலேயும் நிலைத்திருக்க தேவன் உதவி செய்வாராக.

கர்த்தருக்கு பயந்து நடக்கும் பயம் தம் வாழ்வில் இருக்கும்போது நமக்கு திடநம்பிக்கை உண்டு, நம் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும் (நீதி-14:26)

தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் தேவன் வெறுக்கிறார் என்று நீதி-8:13-ல் வாசிக்கின்றோம். தேவன் வெறுக்கும் காரியங்கள் நம்மில் ஏதேனும் உண்டா என நினைத்து பார்ப்போம். தேவன் உணர்த்தும் காரியங்களை மாற்றிக்கொள்ள அவர் பலிபீடத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

தேவனுக்கு பயந்த வாழ்வினை அனுதினமும் வாழ்ந்து எஜமானனை பிரியப்படுத்துவோம். கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரி,
**அனிதா திவ்யராஜ்**

## "சிந்திக்க சில மணித்துளிகள்"

பாவத்திற்கு விலகியிரு, பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்திடு! அந்நிய தேவர்களை, புறஜாதிகளை நாடாதே! மனிதர்களை நம்பியோ, பணத்தின் பின்னே நீ ஓடாதே! இயேசுவை மட்டும் நீ நாடி, தேடி, ஓடோடி வா! சீர் கேடான வீண் பேச்சுகளுக்கு கள்ள உறவுகளுக்கு விலகியிரு! நேசரின் உபதேசங்களை பிறருக்கு போதித்திடு! வீணான தர்க்கங்களைக் கண்டு, சற்றும் பயந்திடாதே! அன்பரின் பாதத்தில் அமர்ந்து மனபாரங்களை இறக்கி வைத்து விடு! விலையேறப் பெற்ற வேதத்தின் இரகசியங்களைப் புரிந்திடு! துன் மார்க்கரின் ஆலோசனைகளைக் கேட்டிடாதே! பரிகாசம் செய்பவர்கள் மத்தியில் நில்லாதே! இயேசுவின் சிலுவை அன்பினை மட்டும் நீ நாடிடு! தூற்றுபவர்களின் செயல்களைக் கண்டு மனம் பதறாதே! இரட்டை வாழ்க்கை வாழ்பவர்கள் கள்ள உபதேசிப்பவர்களுக்கு எச்சரிக்கையாயிரு! துணிகரமான பாவச் செயல்களைக் கண்டு திகையாதே! நீதி, நியாயம் செய்யும் இயேசுவிடம் நிச்சயம் உனக்கு பதிலுண்டு! பாவியை நேசித்து பாவத்தை மன்னிக்கும் தூயவரிடம் சரணடைந்து விடு! தேவனின் சித்தம் செய்ய உன்னையே, நீ அர்ப்பணித்துவிடு நமக்காக, அவர் யுத்தம் செய்வது உறுதி உலகப்பிரகாரமான மனிதனையல்ல, இயேசுவை நோக்கிக்கூப்பிடு இனி காலம் செல்லாது, இன்றே இரட்சண்ய நாள் பரலோக வாழ்வை மட்டுமே, நீ நாடிடு "ஜெபமே ஜெயம்! வெற்றி நிச்சயம் விடுதலை சத்தியம்" சிந்தித்து நீ செயல்படு! வெற்றி நடைபோட்டு, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றிடுவோமே!

## போதகர் ஜீவானந்தம் (பிறப்பு :1932)

போதகர் ஜீவானந்தம் அவர்கள் கிறிஸ்துவை அறியாத ஒரு இந்து குடும்பத்தில் சாலம் பாளையம் எனும் கிராமத்தில் பிறந்தார். (தென் ஆற்க்காடு மாவட்டம்)எட்டு வருட பள்ளிப் படிப்புக்குப் பின்னர் தந்தையார் போலவே ஆசிரியராக விரும்பி விழுப்புரம் அருகில் உள்ள கத்தோலிக்க பள்ளி ஒன்றில் ஆசிரியர் பியிற்சியை மேற்கொண்டார்.வெற்றிகரமான ஆசிரியர் பயற்சிக்கு பின்னர் 1951 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் பணி நியமன ஆணை கிடைக்கவே சென்னைக்கு இடம் பெயர்ந்து ஆசிரியர் பணியினை செய்து வந்தார்.அந்த நாட்களில் தி.மு.க வின் மீதுள்ள அதீத பற்றால் கழகத்தின் தீவிர தொண்டனாய் பணியாற்றி வந்தார்.

1957 ஆம் ஆண்டு லேமென் சுவிஷேச ஐக்கியத்தின் மூலமாக கிறிஸ்துவை அறிந்துகொண்டு மனமாற்றம் அடைந்து புதுவாழ்வை தொடங்கினார்.இரட்சிக்கப்பட்ட சில நாட்களிலேயே சுவிஷேசகராக நற்செய்தியை முழங்க ஆரம்பித்துவிட்டார்.1960 ஆம் ஆண்டு பரிசுத்த ஆவியின் அமர்வு பெற்று பகுதி நேரமாக ஊழியம் செய்து வந்தார். 1968 இல் தனது ஆசிரியர் பணியினை ராஜினாமா செய்துவிட்டு முழுநேரமும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய புறப்பட்டார்.இந்த நாட்களில் தான் ஐயா அவர்களுக்கு ACA சபைகளுடனான நெருக்கம் அதிகமானது.

1975 ஆம் ஆண்டு C.P.D அருமைநாயகம் அவர்களின் முயற்சியில் முதன்முறையாக கடல் கடந்து யாழ்பாணம் பகுதிகளில் நற்செய்தியின் ஸ்தானாபதியாக ஊழியம் செய்தார்.

ஜீவானந்தம் ஐயா நடத்தி வந்த முழு இரவு ஜெபங்கள் சென்னை பட்டணத்தில் அநேகரை கறிஸ்துவின் ஊழியத்தை செய்ய எழுப்பிவிட்டது. சகோ. டி.ஜி.எஸ் தினகரன் அவர்கள் இந்த முழு இரவு ஜெபங்களில் தவறாமல் கலந்து கொள்வார்.1983 முதல் 1990 வரை World Missionary Evangelism, Madras என்ற ஸ்தாபனத்தை நிர்வகித்தார்.1990 ஆம் ஆண்டு தேவனுடைய தரிசனத்தை பெற்ற 'மகிழ்ச்சி' திருசபையை தொடங்கினார் (Delight Christian Assembly).

மகிழ்ச்சி பத்திரிக்கையின் ஆசிரியராயும் ஸ்தாபகராயும் விளங்கினார்.


கர்த்தரால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட ஜீவானந்தம் ஐயா அவர்களின் மூலமாகதான் பாஸ்டர் D.மோகன்(NLAG) கிறிஸ்துவின் ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தார்.'திருக்கரத்தால் தாங்கி என்னை . . .' என்ற பாடலை இயற்றிய சகோ. பீட்டர் அவர்களுக்கு ஐயா தான் புதுவாழ்வு கொடுத்தார் எனலாம்இ தான் செல்லும் இடமெல்லாம் சகோ. பீட்டரை அழைத்து சென்று மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவரை தன் கூடவே தங்கவைத்து உணவளித்தார்.


இது போல ஐயா அவர்கள் உருவாக்கிய தேவமனிதர்கள் அநேகர். பாஸ்டர் ஜீவானந்தம் போன்றோருக்காக கர்த்தரை துதிப்போம்.



# Kids Corner







RIYA

RACHEL VINOTH





JAYDEN PAUL

HANISH DINESH

# Answers for the last month puzzle




ACROSS
a) He betrayed Jesus (Mat 26:14)
e) Brother of Simon Peter (Mat 4: 18)
f) The disciple whose name starts with 'B'
g) The zealot
i) Tax collector
j) Son of zebedee

DOWN
a) Son of Alphaeus
b) He explained to Nathanael about Jesus and brought him to Jesus (John 1: 46)
d) He is also called as Didymus (John 11: 16)
k) Witnessed transfiguration of Jesus (Mat 17:1)

Right to Left
c) He walked on water (Mat 14: 29)

BOTTOM TO TOP
f) Son of James

## *PROPHETS*

Find and circle the following Names pf prophets

DANIEL
ZECHARIAH
NATHAN
JOEL
MOSES
ELIJAH
SAMUEL
AMOS
ISAIAH
BALAAM

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | Y | O | D | G | J | N | A | T | H | A | N | C | B |
| D | X | X | Q | S | T | U | V | W | E | P | H | W | Y | I |
| L | E | U | M | A | S | D | W | W | P | R | C | A | L | B |
| L | D | A | N | I | E | L | B | H | K | M | U | X | F | G |
| O | A | S | D | G | H | E | F | A | O | R | S | T | I | V |
| M | K | Q | P | S | R | E | X | Y | L | V | O | L | S | N |
| G | N | B | G | O | N | L | H | J | L | A | I | K | A | M |
| P | B | O | Q | R | M | I | R | T | W | X | A | Y | I | Z |
| T | O | L | A | M | F | J | K | Z | P | S | O | M | A | Q |
| Q | Z | I | O | G | H | A | J | L | U | V | O | E | H | M |
| B | D | S | Z | Y | M | H | N | A | B | O | D | Z | P | O |
| T | E | M | R | R | S | Q | T | A | J | O | E | L | K | L |
| S | A | R | T | W | L | O | I | J | O | V | B | Q | Z | Z |
| Q | T | A | D | F | Z | E | C | H | A | R | I | A | H | B |

BY
Sharon Grace. M

Answers will be next month.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில



















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

முதன்மை ஊழியர்

சகோ. S.ஸ்டாலின்

66021072 - 96760452

செயலாளர்

சகோ. S. சுகுமார்

99837646

பொருளாளர்

சகோ. S. சிவ குமார்

97224276

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . செலின் டேவிட்

65967170 - 99368775

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. சுபின் சிங்

65197164-65772762

Church Website Address - ahmaditamilchurch.com

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only